

நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்வில், நடைபெற்ற நிகழ்ச்சியில் 104 பயனாளிகளுக்கு ரூ.16.44 இலட்சம் மதிப்பில் வன உரிமை ஆவணங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை, நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, அரசு தலைமைக்கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில் நேற்று (20.09.2025) வழங்கினார். உடன் முதன்மை வன பாதுகாவலர் ராகேஷ்குமார் டோக்ரா கள இயக்குநர் (முதுமலை புலிகள் காப்பகம்), கிருபாகரன், மாவட்ட வன அலுவலர்கள் (நீலகிரி கோட்டம்), கௌதம், வெங்கடேஷ் பிரபு (கூடலூர்) உட்பட பலர் உள்ளனர்.

### பனைமரம் வெட்ட கட்டுப்பாடு !

# தமிழ்நாடு அரசு அரசாணை! திராவிட மாடல் அரசுக்கு பாராட்டு!

## பனைமர நல வாரிய தலைவர் எர்ணாவூர் நாராயணன் அறிக்கை !

சென்னை செப்:21



இதுகுறித்து பனைமர நல வாரியத் தலைவர் எர்ணாவூர் நாராயணன் விடுதுள்ள அறிக்கை வருமாறு;

பனைமரம் நமது மாநில மரம். பனைமரம் என்பது அதன் உடலில் ஒவ்வொரு பாகத்தையும் மக்களுக்கு பயனாக அளிக்க கூடியது. கிராமப்புற பொருளாதாரத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இப்போது பனை மரங்கள் வேகமாக வெட்டப்பட்டு வருவதால் தமிழர்களின் ஒரு பாரம்பரிய தொழில் அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. இந்நிலையில் தமிழ்நாடு பனைமர நல வாரியத்தின் ஆய்வுக் கூட்டத்தில் பனை மரம் அழிவை தடுப்பதற்கு பனைமரம் வெட்ட தமிழ்நாடு அரசு புதிய சட்டம் மற்றும் அரசாணை வெளியிட வேண்டும் என கூட்டத்தில் தீர்மானம் இயற்றி தமிழ்நாடு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றோம்.

தமிழ்நாடு வரலாற்றில் முதன் முறையாக விவசாயத்துக்கு தனி பட்ஜெட் தாக்கல் செய்து பனை மரங்களை பாதுகாக்கவும், பனைமர விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பெருக்கவும்,

தமிழ்நாடு அரசு சட்டமன்ற கூட்டத் தொடரில் 110 விதியின் கீழ் பனை மரங்கள் வெட்ட மாவட்ட ஆட்சியாளர் அனுமதி பெற வேண்டும் என உடனடியாக அறிவித்தது.

இந்நிலையில் நேற்று பனை மரங்கள் வெட்ட மாவட்ட ஆட்சியாளர் அனுமதி பெற வேண்டும், அனுமதி பெற்று மரம் எடுத்துச் செல்லும் போது உரிய ஆவணத்தை காண்பிக்க வேண்டும் எனவும், ஒரு மரம் வெட்டினால் 10 பனைமரக்கன்றுகள் நட வேண்டும் எனவும் இன்று தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

பனை மரம் தொழிலாளர்கள் வாழ்வாதாரம்,மற்றும் பனை மரம் வெட்டப்படுவதை தடுக்கும் விதமாக அறிவித்த தமிழக அரசிற்கு தமிழ்நாடு பனைமர நல வாரியத்தின் சார்பாக பாராட்டுகளை, வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு எர்ணாவூர் நாராயணன் தெரிவித்துள்ளார்.




